நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
சென்னை–5.

சுற்றறிக்கை

ந.க.எண்.748/08/குவ2 நாள்.21.09.2009

பொருள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்–குடிநீர் வழங்கல்–புதிய குடிநீர் இணைப்புகள் – சில பின்பற்றத்தக்க வழிமுறைகள் –வழங்குவது –சம்பந்தமாக.

பார்வை ஆரசாணை (நிலை) எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.7.07

------

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புக்கள் வழங்குவதில் உள்ள நடைமுறையை எளிதாக்கிட பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையின் மீது மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள்/பொறியாளர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2.மேற்காணும் அரசாணையின் முக்கிய நோக்கம் என்னவெனில், புதிய குடிநீர் இணைப்புக்கள் அந்தந்த அமைப்புக்களின் கட்டண விதிகளுக்குட்பட்டு இணைப்பு எண்ணிக்கையில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இணைப்புக்கள் கோரி வரப்பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இணைப்புகள் வழங்குவதே ஆகும். அரசாணையின்படி விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்த 7 நாட்களுக்குள் குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

3.மேலும் அரசாணையின்படி தொழில்நுட்ப காரணங்களினால் குடிநீர் இணைப்புக்கள் வழங்க முடியாத தெருக்கள்/ பகுதிகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தொழில் நுட்ப காரணங்கள் சரிசெய்யப்பட்டு விண்ணப்பங்கள் மட்டும் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் குடிநீர் இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டும். மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மேற்கண்ட அரசாணைக்குப்பின் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கும் நடைமுறை ஆராய்ந்ததில், நடைமுறைகள் ஒரே மாதிரியாக இல்லாமலும் வெவ்வேறு நடைமுறைகளைக் கடைபிடிப்பதாலும் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

மேற்படி காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு ஒரே மாதிரியான நடைமுறைகள், கீழ்க்காணும் புதிய வழிமுறைகள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் கண்டிப்பாக பின்பற்ற அறிவுறுத்தப்படுகின்றது.

1) மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் அனைத்தும் புதிய குடிநீர் இணைப்பிற்கான விண்ணப்ப படிவத்தை (படிவம்–அ) மாநகராட்சி/நகராட்சி தகவல் மையத்தில் வழங்க வேண்டும். மேலும் இணைய தளத்தில் கிடைக்கும்படி செய்திடல் வேண்டும்.

2) மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் அனைத்தும் புதிய குடிநீர் இணைப்பிற்கு கீழ்க்கண்டவாறு தொகை கணக்கிட்டு நகராட்சியின் தகவல் பலகையிலும், வரிவசூலிக்கும் மையத்திலும் அறிவிப்பதோடு பெரிய அளவில் விளம்பரப்படுத்தவும் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | விண்ணப்ப படிவ கட்டணம் | | | | இலவசம் |
| ஆ | வைப்புத்தொகை<br>அ)வீட்டுப் பயன்பாடு<br>ஆ)வீட்டுப் பயன்பாடல்லாதவை | | | | ரூ. |
| இ | சொத்துவரி நிலுவைத் தொகை | | | | ரூ. |
| ஈ | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. | |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1050 | 2250 | 2600 | ரூ. |
| | above 30–90 மீட்டர் நீளத்திற்கு | 1650 | 2850 | 3200 | ரூ. |
| உ | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணம் துணை விதிகளில் குறிப்பிட்டவாறு. | | | | ரூ. |
| | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகை | | | | ரூ. |

ஊ ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்(ஏப்ரல் 1ம் தேதி முதல்) விண்ணப்பப்படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

3)அ) விண்ணப்பதாரர்/ பயனாளிகளிடம் நிறைவு செய்யப்பட்டு பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் உடனுக்குடன் அன்றைய தினமே தகவல் மையத்தில் உள்ள உரிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(ஆ) மேற்காணும் வரையறுக்கப்பட்ட கட்டணங்கள் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட்டவுடன் அதற்குண்டான பற்றுச்சீட்டின் நகல் மனுதாரருக்கு வழங்க வேண்டும். அதன் நகலினை நகராட்சி பொறியியல் குடிநீர் பிரிவிற்கு வழங்கப்பட வேண்டும்.

இ) வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குதல் சம்பந்தமான பதிவேடுகள் அனைத்தும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்களால் பராமரிக்கப்பட வேண்டும்.

ஈ) பெறப்படும் விண்ணப்பப்படிவங்களின் முதுநிலைப் பட்டியல் இணைய தளத்தில் உடனுக்குடன் வெளியிடப்படப்பட வேண்டும்.

4) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய குடிநீர் இணைப்புகள் நகராட்சி நிர்வாக இயக்குநரக, தலைமைப் பொறியாளரின் ஒப்புதலின்பேரில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

5) 1. விண்ணப்பதாரர் புதிய குடிநீர் இணைப்புக்குண்டான தேவையான குழாய்களை பதித்து விட்டு நகராட்சிப் பொறியாளரிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

6)அ) விண்ணப்பதாரரிடம்/ பயனாளியிடம் முறையான தகவல் பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட நகராட்சி/மாநகராட்சி அலுவலர்கள் சரிபார்த்து அலுவலர்கள் முன்னிலையில் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பம் மற்றும் உடன்படிக்கை பத்திரம் ஆகியவை உடனுக்குடன் தகவல் மையத்தில் பதிவு செய்து விண்ணப்பதாரரிடம் கையொப்பம் பெற்று 7 நாட்களுக்குள் குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

7) வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டபின் பதிவேட்டில் உள்ள விவரங்கள் குடிநீர்க்கட்டணக் கேட்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். துணை விதிகளின்படி குடிநீர் கட்டணம் உரிய காலத்தில் வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றும் போது விண்ணப்பதாரர்கள்/பயனாளிகள் நகராட்சி ஆணையர்/மாநகராட்சி ஆணையர் மற்றும் செயல் அலுவலர்களை சந்திக்கும் நிர்ப்பந்தம் குறைகிறது. மேலும் தவறுகளும் நடைபெற வாய்ப்பில்லை. புதிய நடைமுறைகளின் நல்ல நோக்கத்தை சரிவரப் புரிந்து கொண்டு, பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுமில்லாமல் குடிநீர் இணைப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால வரம்பிற்குள் வழங்கப்பட வேண்டும். புதிய இணைப்புக்கள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்கப்படுகின்றனவா என்பதை, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள்/ மண்டலப் பொறியாளர்களும் மாநகராட்சிகளைப் பொறுத்தவரை ஆணையர்களாலும் குறிப்பாக கண்காணித்து குறைகள் இருந்தால் உடனுக்குடன் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

இத்துடன் விண்ணப்பப் படிவம் இணைத்து அனுப்பப்படுகின்றது.

நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து நகராட்சி/மாநகராட்சி ஆணையர்கள்
அனைத்து செயல் அலுவலர்கள் 3ம் நிலை நகராட்சிகள்
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
அனைத்து அலுவலர்கள், ந.நி.இயக்குநரகம், சென்னை–5.

நகல்

1.அரசு செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–9.
2.தகவல் தொழில்நுட்ப வல்லுநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை.
3. இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்.

இந்த விண்ணப்பப்படிவம்
இலவசமாக வழங்கப்படுகிறது

படிவம்—அ
விண்ணப்ப படிவம்
…………………நகராட்சி/ மாநகராட்சி

அனுப்புநர்

பெறுநர்

ஆணையர்
…………………மாநகராட்சி/நகராட்சி

வீட்டு உரிமைதாரர் / குடியிருப்போர் ஆகிய நான் மேற்காணும் முகவரியில் புதிய வீடு/வணிகம்/தொழிற்சாலை குடிநீர் இணைப்பு வழங்க கேட்டுக் கொள்கின்றேன்.

குடிநீர் வழங்கல் துணை விதிகளின்படி என்னால் பயன்படுத்தப்படும் குடிநீருக்கான கீழ்க்கண்ட கட்டணங்களை நகராட்சி தகவல் மையத்தில் தெரிவித்துள்ளவாறு செலுத்த ஒப்புக்கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| 1 | வைப்புத்தொகை<br>அ)வீட்டுப்பயன்பாடு<br>ஆ)வீட்டுப்பயன்பாடல்லாதவை | ரூ. |
| 2 | சொத்துவரி நிலுவைத் தொகை (அந்த அரையாண்டு முடிய) | ரூ. |
| 3 | சாலை சீரமைப்புக் கட்டணம்(குறிப்பில் தெரிவித்துள்ளவாறு) | ரூ. |
| 4 | நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணம்<br>(குடிநீர் துணை விதிகளில் குறிப்பிட்டவாறு.) | ரூ. |
| | நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை | ரூ. |

மேலும் குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளை பின்பற்றுவேன் என்று உறுதியளிக்கின்றேன். ஏதேனும் நிகழ்வில் குடிநீர் இணைப்பினை நீக்கம்(Cancel) செய்வதாக இருந்தால் ஆணையர், பொறியாளர் அல்லது உரிய அலுவலர்களுக்கு ஒரு மாதம் முன்னதாக எழுத்து மூலம் தகவல் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விண்ணப்பதாரர் கையொப்பம்
(உரிமைதாரர்/குடியிருப்போர்)

இடம்
நாள்.

குறிப்பு: விண்ணப்பதாரர் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். (சாலைக்கட்டணம் 2009—2010ம் ஆண்டிற்கான கட்டணம்) சாலையின் தன்மை மற்றும் சீரமைக்க வேண்டிய நீளம் ஆய்வின் போது வேறுபடுமாயின் அதற்கான கூடுதல் தொகையை செலுத்த உறுதியளிக்கின்றேன்.

| 5 | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|---|
| | 0—30 மீட்டர் நீளத்திற்கு | 1050 | 2250 | 2600 |
| | 30—90 மீட்டர் நீளத்திற்கு | 1650 | 2850 | 3200 |